(அ) விவசாய தொழில் கழகத்தின் சார்பில் சென்னை, தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தூத்துக்குடி, மண்டபம் போன்ற இடங்களிலே அதிகமான மீனைப் பிடித்து வருகிறார்கள். அப்படி மீன் பிடித்து வரும் இடங்களிலே மீனைப் பதப்படுத்துவதற்குப் போதுமான வசதி வாய்ப்புகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அங்கே இருக்கின்ற நிலையங்கள் போதுமானதாக இல்லை என்று கூறுகிறார்கள். அதை இன்னும் விரிவுபடுத்தி மீனைப் பதப்படுத்திக் கொள்ளவேண்டிய இன்னொரு திட்டத்தைக் கொண்டுவர அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : உறுப்பினர் கூறிய யோசனையை ஏற்கெனவே இந்தத் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது பற்றி சரியான ஆய்வு செய்து, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பர்கூரில் கால்நடைப் பண்ணை.

*698 வினு.—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் புகழ் பெற்ற பர்கூர் காளை மாட்டினங்களைப் பேணிக்காப்பதற்கென தனியாக அரசு பண்ணை அமைத்து கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகள்

*699 வினு.—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் திருநெல்வேலி மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் பாதுகாக்கப்படும் வன விலங்குகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திருநெல்வேலி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த காடுகளில் புலி, சிறுத்தைப்புலி, யானைகள், கடமான், புள்ளிமான், நீலகிரி தார் எனப்படும் காட்டெருமை, குரங்குகள் முதலான வன விலங்குகள் காணப்படுகின்றன. இந்தப் பகுதி ‘‘ வேட்டையாடுவதற்குரியதல்ல ’’ எனத் தடை விதிக்கப்பட்டுள்ளபடியால், இவ்விலங்குகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இந்த மாதிரி வன விலங்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்போது அது எந்த அளவிற்கு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாமா? வனவிலங்குகளை வேட்டையாடிய குற்றம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அந்தப் பகுதி வேட்டை ஆடுவதற்கான இடமில்லை என்று தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: வனவிலங்குகள் மறைமுகமாக வேட்டை ஆடப்பட்டிருக்கின்றனவா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன் :அது பற்றிய தகவல் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள இந்தக் காடுகளில் புலிகள் அடித்து மாடுகள் இறந்து போகின்றன என்றும், பாலிடால் வைத்து கொல்லப்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. இதில் எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவரவர்களே, புலி அடித்து மாடுகள் இறந்ததும் உண்மை, பாலிடால் வைத்து இறந்ததும் உண்மை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் வன விலங்கு சரணாலயம் அமைப்பதற்கான குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ? அப்படியானால் குற்றாலம் பகுதியில் நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போதே திருநெல்வேலி மாவட்டத்தில் முண்டந்துறை பகுதி சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Thiru. K. M. SUBRAMANIAM: Sir, was there an epidemic disease the forest area and wild animals died of it.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைப் பற்றிய விபரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்போது இந்தியாவில் சிங்கம், புலி போன்ற மிருகங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிகிறது. இப்போது மேற்குத் தொடர்ச்சி மலையில் எவ்வளவு புலிகள் இருக்கின்றன? இவைகளின் எண்ணிக்கை வருஷா வருஷம் கணக்கு எடுக்கப் பட்டு வருகிறதா? இவைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறதா என்பதை அரசு பரிசீலனை செய்கிறதா என்பது பற்றிய விபரத்தைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்கான கணக்கு எடுக்கப்பட்ட எண்ணிக்கை கிடையாது. நானே சில சமயத்தில் பார்த்திருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, வன விலங்குகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது தேவையான ஒன்று என்று இந்த அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில, மாவட்ட அளவில் தனி அதிகாரி இருந்து பராமரிப்பு செய்து வருகிறார்கள்.

தேக்கு உற்பத்தி

*700 வினு.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தேக்கு உற்பத்தியைப் பெருக்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து தேக்கு மரங்களை வளர்க்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1975 ஜனவரி மாதம் முடிய இதுவரை தேக்கு மரம் 9330.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.15 லட்சம் செலவில் சுமார் 2500 ஹெக்டேரில் தேக்கு மரங்கள் பயிரிடத் திட்டம் உள்ளது.